## பிரிவு - 2

## உள்ளாட்சி மன்றங்களின் செயல்பாடுகள் (Functions)

### ஊரக உள்ளாட்சி மன்றங்கள்

**4.2.01.** ஊரக உள்ளாட்சி மன்றங்களின், அதாவது ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்டபஞ்சாயத்துக்களின் பணிகள், தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளில் தெளிவாகக் வரையறுக்கப்பட்டுள்ளன. ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில், அவற்றின் பணிகள் (i) கட்டாயப் பணிகள் (Obligatory) என்றும் (ii) விருப்பப்பணிகள் (Discretionary) என்றும் (iii) முகவரமைப்புப்பணிகள் (Agency) என்றும் பொதுவாக வகைப்படுத்தப்படுகின்றன.

### (அ) ஊராட்சிகள்

**4.2.02.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் 110 ஆம் பிரிவின் கீழ் ஊராட்சிகளின் கட்டாயப் பணிகளென கீழ்க்கண்டவை குறிப்பிடப்பட்டுள்ளன.

(i) அனைத்து ஊராட்சி சாலைகளையும் அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல்;

(ii) கட்டிடங்கள் அமைந்துள்ள பகுதிகளில் அமையப்பெற்றுள்ள பொதுச் சாலைகளிலும், பொது இடங்களிலும், விளக்குகள் அமைத்தல்.

(iii) தெருக்களை சுத்தப்படுத்தல், சேர்ந்திருக்கம் குப்பகைூளக்குவியல்களை அகற்றுதல், பொதுக்கழிப்பிடங்கள் அமைத்து, பராமரித்தல்;

(iv) இடுகாடு களையும் சுடுகாடுகளையும் ஏற்படுத்தி பராமரித்தல்;

(v) நீர் ஆதாரங்களை குளிப்பதற்காகவும் சுத்தப்படுத்துவதற்காகவும் உருவாக்கி பராமரித்தல் மற்றும்

(vi) அறிவிக்கை மூலம் அரசு அளிக்கும் ஏனைய பணிகள்.

**4.2.03.** இதேபோன்றே, ஊராட்சிகளின் விருப்பப் பணிகள் என மேற்படி சட்டத்தின் 111 ஆம் பிரிவின்கீழ் தெரிவிக்கப்பட்டுள்ள பணிகள் வருமாறு:

சட்டத்தின் சரத்துக்களுக்கும், அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு, ஒரு ஊராட்சி பின்வரும் பணிகள் தொடர்பாகவும், கிராமத்தின் தேவைகளை நிறைவு செய்யத் தாம் தகுதியென கருதும் நிதியொதுக்கங்களைச் செய்யலாம்.

(அ) ஊராட்சிப்பகுதியில் அனைத்து பொதுச் சாலைகளின் ஓரங்களிலும் மரங்கள் நட்டு, பாதுகாத்தல்;

(ஆ) கட்டிடங்கள் அமைந்துள்ள பகுதியைத்தவிர ஏனைய பகுதிகளில் அமையப்பெற்றுள்ள பொதுச் சாலைகள், மற்றும் பொது இடங்களில் விளக்குவசதி ஏற்படுத்திக் கொடுத்தல்.

(இ) பொது அங்காடிகளை (ஊராட்சி அங்காடிகள்) ஏற்படுத்தி, அவற்றைப் பராமரித்தல்.

(ஈ) ஊராட்சி பொருட்காட்சிகள், விழாக்கள் என்று வகைப்படுத்தப்பட்ட பொருட்காட்சிகளையும் விழாக்களையும் கட்டுப்படுத்தல்.

(உ) சரக்கு ஏற்றியிறக்கும் இடங்கள், தங்குமிடங்கள், வண்டி நிற்குமிடங்கள், கால் நடைப்பட்டிகள் ஆகியவற்றை எற்படுத்தி பராமரித்தல்.

(ஊ) ஆடு, மாடு வெட்டுமிடங்களை ஏற்படுத்தி, பராமரித்தல்.

(எ) படிப்பகங்கள் ஏற்படுத்தி, பராமரித்தல்.

(ஏ) வானொலி மற்றும் தொலைக்காட்சிகளை நிறுவி, பராமரித்தல், விளையாட்டு அரங்கங்கள், பூங்காக்கள், விளையாட்டுக்குழாம்கள், உடற்பயிற்சி மையங்கள் ஆகியவற்றை ஏற்படுத்தி, பராமரித்தல்.

(ஐ) எழுத்தறிவு மையங்கள், சமூகக்கல்வி மையங்களை ஏற்படுத்தி பராமரித்தல்;

(ஒ) பொதுப்பயன்பாட்டிற்கான பணிகள் செய்தல் கிராம மக்களின் பாதுகாப்பு சுகாதாரம் சௌகரிய வசதிகள், பண்பாடு நிகழ்ச்சிகள், மனமகிழ் நடவடிக்கை ஆகியவற்றுக்கு வகை செய்தல்.

முகவரமைப்பு பணிகள்

**4.2.04.** சட்டத்தின் 119 (2) ஆம் பிரிவின் கீழ் ஒரு சிறப்பு விதிமுறை இயற்றப்பட்டுள்ளது; அதன்படி, வயைறுக்கப்படக் கூடிய விதிகளுக்கு உட்பட்டு அரசு, நிலநிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சியர், அல்லது கோட்டாட்சியர், மாவட்டப்பஞ்சாயத்து, ஊராட்சி ஒன்றியக்குழு அல்லது தலைமை நிருவாக அலுவலர், ஆணையர் அல்லது ஒரு நபர் அல்லது நபர்களடங்கிய ஒரு குழு, ஊராட்சியின் ஒப்புதலோடு ஒரு அமைப்பின் நிருவாகத்தை அல்லது ஏதேனும் ஒரு பணியின் செயலாக்கத்தை அல்லது பராமரிப்பை அல்லது ஏதேனும் ஒரு அதிகாரத்தை செயல்படுத்தும் பொறுப்பை அல்லது ஏதேனும் கடமையை நிறைவேற்றும் பொறுப்பை, இந்தச் சட்டத்தில் வகை செய்யப் பட்டிருந்தாலும், இல்லா விட்டாலும் ஊராட்சிக்கு மாற்றலாம்.

**4.2.05.** சட்டத்தின் 257ஆம் பிரிவின் கீழ், அரசு அறிவிக்கை வெளியிடுவதன்மூலம், அதில் குறிப்பிடக்கூடிய நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்கு உட்பட்டும், ஓர் ஊராட்சிக்கு சட்டத்தின் IV-வது விவர அட்டவணையில் (அரசியலமைப்புச் சட்டத்தின் 11ஆம் விவர அட்டவணை)

பட்டியலிடப்பட்டுள்ள பொருள்கள் தொடர்பானவை உட்பட, பொருளாதார வளர்ச்சி, சமூக நீதி குறிந்த திட்டங்களைத் தயாரிக்கும் அதிகாரங்களையும், பொறுப்புகளையும் ஒப்படைக்கலாம்.

**(ஆ) ஊராட்சி ஒன்றியங்கள்**

**4.2.06.** ஊராட்சி ஒன்றியங்களின் கட்டாயப் பணிகள், சட்டத்தின் 112 ஆம் பிரிவில் விவரிக்கப்பட்டுள்ளன; அவை கீழே விவரிக்கப்பட்டுள்ளன:

இச்சட்டத்தின் சரத்துக்களுக்கும், அவற்றின் கீழ் இயற்றப்படும் விதிகளுக்கும் உட்பட்டு, ஒரு ஊராட்சி ஒன்றியக் குழு அதன் நிதி வரம்பிற்குட்பட்டு, பின்வரும் பணிகள் தொடர்பாக ஊராட்சி ஒன்றியத்தின்தேவைகளை நிறைவேற்ற நியாயமான நிதியொதுக்கம் செய்ய வேண்டியது அதன் கடமையாகும்; அதாவது,

(அ) அனைத்து ஊராட்சி ஒன்றியச் சாலைகளை அமைத்தல், பழுதுபார்த்தல், பராமரித்தல்;

(ஆ) மருந்தகங்களை ஏற்படுத்தி, பராமரித்தல்; கிராமப்புற மருத்துவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல்;

(இ) மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல மையங்களை ஏற்படுத்தி, அவற்றை பராமரித்தலும், குடும்பநலத் திட்டத்தில் தாய்மார்களுக்கு ஆலோசனை வழங்குதலும்;

(ஈ) வறியோர் இல்லங்கள், அனாதையில்லங்கள், கடைகள், சிறு பெட்டிக்கடைகளைக் கட்டி பராமரித்தல், தடுப்பூசி போடுவோருக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்பளித்தல், மக்கள் நெருக்கடியைப் போக்குதல், வீட்டுமனைகள் வழங்குதல்;

(உ) தனியார் நிருவகிக்கும் தொடக்கப்பள்ளிகளுக்கு மானியம் வழங்குவது உட்பட தொடக்கப்பள்ளிகளை ஏற்படுத்தி அவற்றைப் பராமரித்தலும், விரிவு படுத்தலும்;

(ஊ) கொள்ளை நோய் அல்லது மலேரியா நோய் தடுப்பும் மற்றும் நிவாரண நடவடிக்கைகளும்;

(எ) ஊராட்சி ஒன்றிய பொருட்காட்சிகள், விழாக்களின் கட்டுப்பாடு;

(ஏ) கால்நடை மருத்துவ உதவி;

(ஐ) கிராமப்புற மனைப்பகுதிகளை விரிவு படுத்தல், கட்டிடங்களை முறைப்படுத்தல்;

(ஒ) ஊராட்சி ஒன்றிய சந்தைகளாக வகைப்படுகின்ற பொதுச் சந்தைகளை ஏற்படுத்தி பராமரித்தல்;

(ஓ) பிறப்பு இறப்பு தொடர்பான புள்ளிவிவரங்களை வைத்துவருதல்;

(ஔ) சத்திரங்களை அமைத்துப் பராமரித்தல்;

(அஅ) வேளாண்மை மேம்பாடு, மற்றும் வேளாண்மைப் பொருட்களின் இருப்பு, வேளாண்மைக் கண்காட்சிகளை நடத்துதல்;

(அஆ) குடிசைத் தொழில்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தல்;

(அஇ) அரசு ஒப்படைக்கும் ஏனைய கடமைகள்.

**4.2.07.** சட்டத்தின்115ஆம் பிரிவு, ஊராட்சி ஒன்றியங்களின் விருப்பப் பணிகளை வரையறுக்கிறது. ஊராட்சி ஒன்றியம், அதனுடைய நிதி வரம்பிற்குட்பட்டு ஊராட்சி ஒன்றியத்தில் வாழும் மக்களின் பாதுகாப்பு, சுகாதாரம், சௌகரியம், வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான பொதுப்பயன்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

**4.2.08.** ஊராட்சி ஒன்றியக்குழுக்களின் முகவரமைப்பு பணிகள் (Agency) சட்டத்தின் 113, 114 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. 113 ஆம் பிரிவின்படி, அரசு வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, கிராமத் தொழில்கள் ஆகியவற்றின் மேம்பாடு தொடர்பான அனைத்து நடவடிக்கைகள் உள்ளிட்ட சமூதாய வளர்ச்சி–தேசிய விரிவாக்கப் பணித்திட்டத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை, ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்க வேண்டும். அது போன்று, அரசு சட்டத்தின் 114ஆம் பிரிவின்படி, அரசால் அல்லது சட்டப்படிக்கான ஒரு அமைப்பு அல்லது முகவரமைப்பால் மேற்கொள்ளப்பட வேண்டிய அல்லது செயல்படுத்தப்பட வேண்டிய திட்டங்களை, திட்டப்பணிகளை, நடவடிக்கைகளை அல்லது அவற்றில் எவையேனும் ஒன்றை ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்படலாம். மேலும், ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பகுதிகளில் அரசால் அல்லது சட்டப்படிக்கான அமைப்பால் அல்லது முகவரமைப்பால் செயல்படுத்தப்படும் திட்டங்களை, பணிகளை, ஏனைய நடவடிக்கைகளை, ஊராட்சி ஒன்றியக் குழு ஆய்வு செய்ய வேண்டும் என அரசு அறிவிக்கை மூலம் ஆணையிட்டால், ஊராட்சி ஒன்றியம் அவ்வாறே செய்யலாம் என சட்டத்தின் 114 (2) ஆம் பிரிவு குறிப்பிடுகிறது.

**4.2.09.** மேலும், சட்டத்தின் 123 ஆம் பிரிவின் படி, அரசு வரையறுக்கக்கூடிய விதிகளுக்கு உட்பாட்டு, நிலநிருவாக ஆணையர், மாவட்ட ஆட்சியர் அல்லது கோட்டாட்சியர் அல்லது யாரேனும் ஒரு நபர் அல்லது நபர்களடங்கிய குழு, ஊராட்சி ஒன்றியக் குழுவின் ஒப்புதலோடு, எந்த ஒரு அமைப்பின் நிருவாகத்தை அல்லது எந்த ஒரு பணியின் செயலாக்கத்தை அல்லது பராமரிப்பை அல்லது எந்த ஒருஅதிகாரத்தைச் செயல்படுத்தும் பொறுப்பை அல்லது ஏதேனும் கடமையை நிறைவேற்றும் பொறுப்பை, இந்தச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தாலும், இல்லாவிட்டாலும், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அல்லது உட்படாத பகுதிகளிலும் நிறைவேற்ற அந்த ஊராட்சி ஒன்றியக்குழுவிற்கு மாற்றலாம். சட்டத்தின் 257ஆம் பிரிவின்படி அதன் IVஆம் விவர அட்டவணையில் பட்டியலிடப்பட்டுள்ள பொருட்கள் தொடர்பானவை உட்பட, பொருளாதார வளர்ச்சி சமூக நீதி போன்ற திட்டங்களைத் தயாரிப்பதற்கான (அரசியலமைப்புச் சட்டத்தின் XI ஆம் விவர அட்டவணை) அதிகாரங்களையும், பொறுப்புகளையும் அரசு ஊராட்சி ஒன்றியத்திடம் ஒப்படைக்கலாம்.

**(இ) மாவட்டப்பஞ்சாயத்துக்கள்:**

**4.2.10.** மாவட்டப் பஞ்சாயத்துக்களின் பணிகள், சட்டத்தின் 163ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மாவட்ட அளவிலான மாவட்ட பஞ்சாயத்தானது அனைத்து ஊரக வளர்ச்சித் திட்டப்பணிகள் குறித்துத் திட்டமிடுதல் செயல்படுத்துதல், கண்காணித்தல் மற்றும் ஆய்வு செய்யும் பொறுப்புகளுடனானஒரு செயலாக்கமுடைய அமைப்பாகவும்பயனுள்ளஅமைப்பாகவும் இருக்கலாமென மாநில நிதி ஆணையம் கருதுகிறது. அதற்கேற்ப மாவட்ட பஞ்சாயத்துக்களுக்கு பணிகள் வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கலாம்.

**(ஈ) பேரூராட்சிகளும், நகராட்சிகளும்**

**4.2.11.** பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளின் பணிகள் ஒரே தன்மை வாய்ந்தவையாகும்; தமிழ்நாடு 1994ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் (திருத்தம்) வெவ்வேறு பிரிவுகளில் அவை குறிப்பிடப்பட்டுள்ளன. அவற்றின் விவரம் பின்வருமாறு;

(i) குடிநீர் வழங்கலும் பராமரிப்பும் (சட்டத்தின் 125,126ஆம் பிரிவுகள்)

(ii) தெருவிளக்குகள் அமைத்தலும் பராமரித்தலும் (136ஆம் பிரிவு)

(iii) பொதுக்கழிவு நீரகற்று வசதிகள் ஏற்படுத்தலும் பராமரித்தலும் (137 ஆம்பிரிவு)

(iv) பொதுக்கழிப்பிடங்களை ஏற்படுத்துதலும், பராமரித்தலும் (145 ஆம் பிரிவு)

(v) தெருக்களைக் சுத்தப்படுத்துவதற்கும் குப்பைகளை அகற்றுவதற்கும் ஏற்பாடு செய்தல் (153 ஆம் பிரிவு)

(vi) பொது தெருக்களும், சாலைகளும் அமைத்து, பராமரித்தல் (162ஆம் பிரிவு)

(vii) பொதுத் தெருக்களின் ஓரங்களில் மரங்கள் நட்டு பாதுகாத்தல் (162A பிரிவு)

**(உ) மாநகராட்சிகள்:**

**4.2.12.** மாநகராட்சியின் முக்கியமான பணிகள் வருமாறு:

(i) குடிநீர் வழங்கலும், அதனைப் பராமரித்தலும் (சென்னை மாநகராட்சியைப் பொறுத்தவரையில், இப்பணியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கவனித்து வருகிறது).

(ii) தெருவிளக்குகள் அமைத்தலும் பாமரித்தலும்;

(iii) பொதுக் கழிவு நீகரற்று வசதிகள் ஏற்படுத்துதலும், பராமரித்தலும்;(சென்னை மாநகராட்சியைப் பொறுத்தரையில், இப்பணியினை சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் கவனித்து வருகிறது)

(iv) பொதுக்கழிப்பிடங்களை ஏற்படுத்துதலும், பராமரித்தலும்;

(v) தெருக்களைச் சுத்தப்படுத்துதலும், குப்பைகளை அகற்றுதலும்;

(vi) பொதுத்தெருக்கள், சாலைகள் முதலியவற்றை அமைத்து அவற்றைப் பராமரித்தல்.

**4.2.13.** உள்ளாட்சி மன்றங்கள் சிறந்த முறையில் செயல் படுவதற்கு, மேலே தெரிவிக்கப்பட்ட பணிகளும், உள்ளாட்சி மன்றங்களுக்கு மாற்றலாம் எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட கூடுதல் பணிகளும் அநேகமாக போதும் என்று நிதி ஆணையம் கருதினாலும், குடிநீர் வசதிகள் செய்து தருதல் மற்றும் அவற்றின் பராமரிப்பும் ஊராட்சிகளிடம் தற்போதைய ஊராட்சிகள் சட்டத்தின்படி இல்லாததால், அதனை முந்திய ஊராட்சிகள் சட்டங்களில் சேர்க்கப்பட்டிருந்தது போன்று ஊராட்சிகளின் கட்டாய பணிகளில் சேர்க்கலாம்.

ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது:

**4.2.14.** உள்ளாட்சி மன்றங்களுக்கு தற்போதுள்ள அதிகாரங்களுடன், முறையே 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டப்படியும், 1994ம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சிகள் (திருத்தப்பட்ட) சட்டத்தின்படி , தமிழ்நாடு மாநகராட்சிகள் சட்டங்களின்படியும், உத்தேசிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், உள்ளாட்சி மன்றங்கள் திறம்பட செயலாற்றுவதற்குப் போதுமானவையாகும். குடிநீர் ஆதாரங்களை ஏற்படுத்தி அவற்றைப் பராமரிக்கும் பொறுப்பை முந்தைய ஊராட்சிகள் சட்டங்களில் வகை செய்யப்பட்டதைப் போன்று ஊராட்சிகளின் கட்டாயப் பணிகளுடன் சேர்த்து விடலாம்.